செந்தமிழ்

V 23. No 2    4.5.50

3L
Q2[illegible]2V,N27 mm
N50.232.
210423

431

OFFICE OF THE REGISTRAR OF BO...
9 - MAY 1950
MADRAS

ॐ श्री गुरुभ्यो नमः


# மாத்வ மித்திரன்.

# THE MADHWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

Vol. 23 புஸ்தகம் 23 — விக்ருதி ஸம்வத்ஸரம் வைசாக-மீ 4—5—'50 குருவாரம் — No. 2 நெ. 2


## ஸ்ரீ பகவத் கீதை.

ஸ்ரீ ம. வே. ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார் எழுதியது.
[காப்பிரைட் ரிஜிஸ்டர்.]

3-வது அத்யாயம்.

---

(முன் 4-ம் பக்கம் தொடர்ச்சி)

இந்திரியங்களால் கிரஹிக்கப்பட்டதான விஷயத்திற்கு ஸங்கல்ப்பம் விகல்ப்பம் இவைகளை ஒட்டவைப்பதால், மனஸ் உத்தமமாகும். மனஸ்ஸைவிட புத்தி உத்தமம். மனஸ்ஸில் நிச்சயம் ஏற்படுவது புத்தியால் என்பதைக்கொண்டு, அது உத்தமமாகும். அப்பேர்ப்பட்ட புத்திக்கு மேலானதாய் எட்டாத நிலைமையில் இருப்பவன் அவன். அவன் யாரென்றால் பரமாத்மாதான், பிந்தி சொல்லப்பட்டதான “ப்ரக்ருதே: க்ரியமாணானி” என்பதில் ப்ரக்ருதி என்னும் பதத்தால் சொல்லப்பட்டவனாய், “தேநேதமாவ்ருத:” இதம் என்னும் பதத்தால் சூசிக்கப்பட்டவனாய், “ரஸோப்யஸ்ய பரம் த்ருஷ்ட்வா நிவர்த்ததே” என்று அறிவிக்கப்பட்டதாயுள்ளவன், அந்த பரமாத்மாதான். இவ்வாறு புத்திக்கு எட்டாதவன் பகவான் என்று

 210423 

அறிந்து, தாரதம்யப்படி அவர் ஸர்வோத்தமன், எல்லோரை விட உத்தமன், என்று நன்கு தெரிந்துகொண்டு, அவரை ஸாக்ஷாத்காரம் செய்துகொள்ளவேண்டும். இந்திரியங்கள் உத்தமங்கள் என்றால், இந்திரியங்களுக்கு அபிமானிகளான தேவர்கள், அவர்களைவிட குறைந்தவர்களான இதர தேவர்களைவிடவும் மனுஷ்யர்களைவிடவும் மேலானவர்கள். இந்திரியங்களின் அபிமானி தேவர்களைவிட அர்த்தங்களான இந்திரிய விஷயங்களின் அபிமானிகள் உத்தமர்கள். அவர்களைவிட மனஸ்ஸின் அபிமானி தேவர்களான கருடன், சேஷன், ருத்திரன் இவர்கள் உத்தமர்கள். அவர்களைவிட புத்திக்கு அபிமானியான ஸரஸ்வதி உத்தமமானவள். அவளைவிட மஹான் ஆத்மா, மஹத் தத்வத்திற்கு அபிமானியான பிரம்மா உத்தமர். அவரைவிட அவ்யக்தள் எனப்படும் மகாலட்சுமி உத்தமமானவள். அவளைவிட உத்தமமானவர் அந்த பரமாத்மா. சிலதுகளை இதில் அத்யாஹாரம்செய்து சேர்த்துக்கொள்ளவேண்டும். ஏனெனில் இந்த சுலோகத்திற்கு மூலபூதமானது காடக ச்ருதி 'இந்திரியேப்ய: பரா ஹ்யர்த்தா: அர்த்தேப்யஸ்ச பரம் மன:| மனஸஸ்து பரா புத்தி: புத்தேராத்மா மஹான் பர:| மஹத: பரமவ்யக்தம் அவ்யக்தாத் புருஷ: பர:| புருஷான்ன பரம் கிஞ்சித் ஸா காஷ்டா ஸா பரா கதி:'' என்று அது அறிவிக்கிறது. "இந்திரியாணி பராணி" என்று சொன்னதைக்கொண்டு, இந்திரியங்கள் உத்தமமானவைகள் என்றால், அவைகளின் விஷயங்களைவிட என்று தானாகவே ஏற்படுகிறது, இவ்வாறு தாரதம்ய க்ஞான பூர்வமாய் பரமாத்மாவை ஸர்வோத்தமன் என்று அறிந்து, ஹ்ருதயகமலத்தில் அவரை ஸாக்ஷாத்காரம் செய்து, ஆத்மனா புத்தியால் ஆத்மானம் மனதை ஸம்ஸ்தப்ய காமாதிகளால் கெட்டுப்போகாமல் விகாரமடையாததாய் செய்துகொண்டு, சிரமப்பட்டுதான் ஜயிக்க கூடுமான காமம் என்னும் உருவங்கொண்டதான சத்ருவை நிர்மூலமாய் நாசப்படுத்திக்கொள். நீ மஹாபாஹோ, அதனால் சத்ருவை ஜயிக்க நீ சக்தன். மஹாபாஹுவாய் வெளி சத்ருவை ஜயிக்க நீ சக்தனாய் இருந்தபோதிலும், உன்னையேயும் ஜயிக்கமாளாதது இந்த காமம் என்று காமத்திற்கு அபாரசக்தி இருப்பதாய் அறி-





ஆகையால் உனக்கு ஏற்பட்ட கர்மயோகத்தைச் செய்ய, காமத்தை, அதின் அதிஷ்டானங்களை நிரோதம் செய்வதால், ஸ்தூலமாய் ஜயித்து, உன் கர்மாவைச் செய்து, அதனால் பரோக்ஷ க்ஞானம் அபரோக்ஷ க்ஞானம் இரண்டையும் அடைந்து அதனால் ஸமூலமாக காமாதி தோஷங்களை போக்கிக்கொண்டு, எந்த தடையுமில்லாமல் முக்தியை அடை. இப்பொழுது ஸ்தூலமான காமாதிகளை ஜயித்து நிஷ்காமகர்மாவைச் செய். அதனால் ஸர்வமங்களமும் உண்டாகும். என்று பகவான் கூறியதாய் அர்த்தம் ஏற்படும். "ஸர்வேப்ய: ப்ரவரா தேவா: இந்திரியாத்யா: இந்திரியாத்மகா:| தேப்யோ மனோபிமானீது ருத்ராஸ்தஸ்மாத் ஸரஸ்வதி| புத்யாத்மகா ததோப்ரம்மா மஹானாத்மா பர: ஸ்ம்ருத:| அவ்யக்தரூபா லக்ஷ்மீஸ்ச வராதேராதோஹரி: ஸ்வயம்| ததத்ஸமோதிகோவேதி ஹ்யானுபூர்வீ ப்ரகீர்த்திதா| யதாக்ரம ப்ரபோதேன நாச்யா: காமாதி சத்ரவ:| ப்ராப்யதேச பரம் ஸ்தானம் விஷ்ணோரதுலமஞ்ஜஸா" என்கிறது ப்ரமாணம். வேதங்களின் இரகசியமான அர்த்தங்களைக்கொண்டதாயும் பரப்ரம்மத்தை அடைய உபாயங்களை அறிவிப்பதாயுமுள்ள ஸ்ரீ கிருஷ்ணார்ஜுனர்களின் சம்பாஷணையால் வெளியான ஸ்ரீ பகவத்கீதையில் கர்மயோகம் எனப்படும்,

3-வது அத்யாயம் ஸம்பூர்ணம்.

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

---

इति ओं तत्सदिति श्रीमद् भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां
योगशास्त्रे श्री कृष्णार्जुन संवादे कर्मयोगो
नाम तृतीयाध्यायस्संपूर्णः ॥
श्री कृष्णार्पणमस्तु

இதி ஓம் தத்ஸத் இதி ஸ்ரீமத் பகவத்கீதாஸு
உபநிஷத்ஸு ப்ரம்மவித்யாயாம் யோகசாஸ்த்ரே
ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுன ஸம்வாதே கர்ம
யோகோ நாம த்ருதீயாத்யாயஸ் ஸம்பூர்ண:|

ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணமஸ்து.

## 3-வது அத்யாயத்தின் மாகாத்மியம்.

ஸ்ரீமத் பகவத்கீதையின் 3-வது அத்யாயத்தை சிரவண படனம் செய்பவர்களுக்கு ஏற்படும் புண்யத்தை அறிவிக்க. ஸ்ரீ வாராஹபுராணத்தில் இந்த அத்யாயத்தின் மகா மாகாத்மியம் சொல்லப்பட்டிருப்பதை இச் சந்தர்ப்பத்தில் அறிவிக்கிறோம். ஜனஸ்தானத்தில் நற்குலத்தில் பிறந்தவனான சேஷ்டன் என்ற ஓர் பிராம்மணன் இருந்தான். அவன் தன்னுடைய ஸ்வந்த கர்மாக்களை விட்டுவிட்டு வியாபாரம் செய்தான். அதனால் வந்த பணத்தை வேச்யா ஸ்திரீயிடம் கொடுத்து ஸ்திரீபோகத்தில் ஈடுபட்டான். பணமெல்லாம் போய் வேசியால் விடப்பட்டவனாய் த்யூதம், ஸுராபானம், வேட்டை முதலானவைகளில் ஈடுபட்டு, பணம் அகப்படாமல் மிக்க தாரித்ர்யமடைந்து கஷ்டப்பட்டான். ஸோமயாகம் செய்ய ஓர் பிராம்மணன் வைத்திருந்த பணத்தைத் திருடி, காட்டுக்கு ஓடி, பர்வத ராஜ்யம் சென்று, அந்த திரவியத்தால் கஸ்தூரி, சவரி முதலானவைகளை வாங்கி வியாபாரம் செய்து, பணத்தை சம்பாதித்து வந்தான். ஓர் நாள் வியாபாரம் செய்துவரும்போது இரவில் ஓர் காட்டில் தங்கவேண்டிவந்தது. நடுராத்திரியில் ஓர் வேடன்வந்து ஓர் மரத்தினடியில் படுத்திருந்த இந்த ப்ராம்மணனிடம் ஏராளமான திரவியங்கள் இருந்ததைப்பார்த்து, அவனை தூக்கத்தில் வெட்டிக்கொன்று பணங்களை கொண்டுபோய்விட்டான். இவ்வாறு துர்மரணமடைந்த இந்த ப்ராம்மணன் காட்டில் அந்த மரத்தில் ஓர் பிசாசமாக இருந்துவந்தான். அந்த பிராம்மணனைத் தேடிக்கொண்டு அவனுடைய பிள்ளை அந்த இடத்திற்கு வரவே, அங்குள்ளோர் அவனுடைய தந்தை அம்மரத்தின் அடியில் கொல்லப்பட்டு கிடந்ததை அறிவித்தனர். அதைக்கேட்டு அப் புத்திரன் துக்கித்து தன் தந்தைக்கு நற்கதியை உண்டாக்கும் உத்தேசத்துடன் காசியாத்திரை சென்றான். அப்போது குளத்தின் சமீபமாக இருந்த அம் மரத்தினடியில் உட்கார்ந்து அவன் பகவத் கீதையின் இந்த 3வது அத்யாயத்தை பாராயணம் செய்தான். (தொடரும்)





## பாலர் ஸ்தோத்திரம்.

---

(முன் 8-ம் பக்கம் தொடர்ச்சி)

210423

89. ம்ருகாதீச நாதம் க்ஷிதிக்ஷிப்தபாதம்
கனுக்ராந்தஜங்கம் கடிஸ்பேடஸங்கம்|
அஜாண்டௌகதேசம் புஜாச்லேஷிதாசம்
ஜயஸ்ரீஸமேதம் பஜேராமதூதம்|

90. சலத்வால காதாத் ப்ரமச்சக்ரவாளம்
கடோராட்டஹாஸாத், ப்ரபின்னாப்ஜ ஜாண்டம்|
மஹாஸிம்ஹநாதாத் விசீர்ணத்ரிலோகம்
பஜேசாஞ்ஜனேயம் ப்ரபும் வஜ்ரகாயம்|

91. ரணேபீஷணேமேகநாதே ஸநாதே
ஸரோஷம் ஸமாரோப்ய ஸௌமித்ரிமம்ஸே|
கநாநாம் ஸுராணாம் கணாம் ச மார்க்கே
நதந்தம் நடந்தம் ஹனூமந்தமீடே|

92. நகத்வஸ்த தம்பாரி தம்போளிதாரம்
பதத்வந்த நிர்தூத கரலோக்ரதண்டம்
பதாகாதபீதாஹி ஜாதாதிவாஸம்
ரணக்ஷோணிதக்ஷம் பஜே பிங்களாக்ஷம்

93. மஹாபூதபீடாம் மஹோத்பாதபீடாம்
மஹார்த்திப்ரபீடாம் மஹாமாரிபீடாம்|
ஹரத்யாசுதே பாதபத்மேஸுவ்ருத்தே
நமஸ்தே நமஸ்தே கபீந்த்ர ப்ரசஸ்த||

26

94. லக்ஷ்மீர்யஸ்ய பரிக்ரஹ: கமலபூ: ஸூனுர் கருத்மாந்ரத:
பௌத்ரஸ்சந்த்ரவிபூஷண: ஸுரகுரு: சேஷஸ்ச சய்யாஸன:
ப்ரம்மாண்டம வரமந்திரம் ஸுரகணா: யஸ்யப்ரபோஸ்ஸேவகா:
ஸஸ்த்ரைலோக்ய குடும்பபாலனபர: குர்யாத் ஹரிர்மங்களம்||
[ஸுலக்னேஸாவதான]

---

26. மங்களாஷ்டகம்.

95. ப்ரம்மாவாயுகிரீசசேஷகருடா தேவேந்த்ரகாமோ குரு:
சந்த்ரார்க்கௌவருணௌ கலௌமனுயமௌவித்தேசவிக்னேச்வ
நாஸத்யௌ நிர்ருதி மருத்கணயுதா: பர்ஜன்ய மித்ராதய: [ரௌ]
ஸன்நீரீகா: ஸுரபுங்கவா: ப்ரதிதினம் குர்வந்துவாம் மங்களம்||
[ஸுலக்னே ஸாவதான]

96. விச்வாமித்ரபராசரௌர்வ ப்ருகவோ கஸ்த்ய: புலஸ்த்ய: க்ரது:
ஸ்ரீமானத்ரிமரீசி கௌஸ்தபுலஹௌ சக்திர்வசிஷ்டோங்கிரா:||
மாண்டவ்யோ ஜமதக்னி கௌதம பரத்வாஜாதய ஸ்தாபஸா:
ஸ்ரீவிஷ்ணோ: பதபத்ம பக்திநிரதா: குர்வந்துவாம் மங்களம்||
[ஸுலக்னே ஸாவதான]

97. மாந்தாதா நஹுஷோம் பரீக்ஷஸகரோ ராஜாப்ருதூர்ஹைஹய:
ஸ்ரீமான் தர்மஸுதோ நலோதசரதோ ராஜாயயாதிர்யது.||
இக்ஷ்வாகு ஸ்சவிபீஷணஸ் ச பரதஸ்சோத்தான பாதோத்ருவ:
இத்யாத்யா: புவிபூபுஜ: ப்ரதிதினம் குர்வந்துவாம் மங்களம்||
[ஸுலக்னே ஸாவதான]

98. ஸ்ரீ மேருர்ஹிமவாம்ஸ்ச மந்தரகிரி: கைலாஸசைலஸ்ததா
மாகேந்த்ரோமலயஸ்ச விந்த்ய நிஷதௌ ஸஹ்யஸ்ததா ரைவத:||
ஸிம்ஹாத்ரிர் வரகந்தமாதனகிரி: மைனாக கோமந்தகௌ
இத்யாத்யா: புவி பூப்ருத: ப்ரதிதினம் குர்வந்துவாம் மங்களம்||
[ஸுலக்னே ஸாவதான]

99. கங்காஸிந்து ஸரஸ்வதீச யமுனாகோதாவரீ நர்மதா
க்ருஷ்ணா பீமரதீச பல்குஸரயூ ஸ்ரீ கண்டகீகோமதீ||
காவேரீ கபிலாவராஹ தனயாநேத்ராவதீத்யாதயோ
நத்ய: ஸ்ரீஹரிபாதபங்கஜபவா: குர்வந்துவாம் மங்களம்||
[ஸுலக்னே ஸாவதான]

100. ஆதித்யாதி நவக்ரஹா: சுபகரா: மேஷாதயோராசயோ
நக்ஷத்ராணி ஸயோககா: ஸகரணா: தத்தேவதா: தத்கணா:|
மாஸாப்தா: ரிதவ: ததைவ திவஸா: ஸந்த்யாஸ்ததாராத்ரய:
ஸர்வேஸ்தாவரஜங்கமா: ப்ரதிதினம் குர்வந்துவாம் மங்களம்||
[ஸுலக்னே ஸாவதான]



101. வேதாஸ்சோப நிஷத்கணாஸ்ச விவிதா: ஸாங்கா: புராணான்விதா:
வேதாந்தா அபிமந்த்ர தந்த்ரஸஹிதா: தர்க்கா: ஸ்ம்ருதீனாம் கணா:||
காவ்யாலங்க்ருதி நீதிநாடககணா: சப்தாஸ்ச நாநாவிதா:
ஸ்ரீ விஷ்ணோர்குணராசி கீர்த்தனபரா: குர்வந்துவாம் மங்களம்||
[ஸுலக்னே ஸாவதான]

102. இத்யேதத்வரமங்களாஷ்டகமிதம் ஸ்ரீவாதிராஜேசவரை:
ஆக்யாதம் ஜகதாமபீஷ்டபலதம் ஸர்வாசுபத்வம்ஸனம்||
மாங்கல்யாதி சுபக்ரியாஸு ஸததம் ஸந்த்யாஸுவாய: படேத்
தர்மார்த்தாதி ஸமஸ்தவாஞ்சிதபலம் ப்ராப்னோத்ய ஸௌமானவ:||
27
103. வைசம்பாயன உவாச||
ச்ருத்வா தர்மானசேஷேண பாவனானி ச ஸர்வச:||
யுதிஷ்டிர: சாந்தனவம் புனரேவ அப்யபாஷத||

* * * *

104. விச்வம் விஷ்ணுர்வஷட்கார: பூதபவ்யபவத் ப்ரபு:|
பூதக்ருத் பூதப்ருத்பாவோ பூதாத்மா பூதபாவன:||
105. பூதாத்மா பரமாத்மாச முக்தானாம் பரமாகதி:|
அவ்யய: புருஷ: ஸாக்ஷீ க்ஷேத்ரக்ஞோ அக்ஷர ஏவச||

* * * *

106. சங்கப்ருந்நந்தகீ சக்ரீ சாரங்கதன்வா கதாதர:|
ரதாங்கபாணி ரக்ஷோப்ய: ஸர்வப்ரஹரணாயுத:|
ஸர்வ ப்ரஹரணாயுத ஓம்நம இதி|
107. வனமாலீகதீ சார்ங்கீ சங்கீ சக்ரீ ச நந்தகீ|
ஸ்ரீமான் நாராயணோ விஷ்ணு: வாஸுதேவோபிரக்ஷது||

* * * *

108. ஸ்ரீ ராம ராம ராமேதி ரமே ராமே மனோரமே|
ஸஹஸ்ரநாமதத்துல்யம் ராம நாம வரானனே||
109 நமோஸ்த்வ நந்தாய ஸஹஸ்ர மூர்த்தயே
ஸஹஸ்ரபாதாக்ஷி சிரோரு பாஹவே|
ஸஹஸ்ர நாம்னே புருஷாய சாச்வதே
ஸஹஸ்ரகோடி யுகதாரிணே நம:||

பாலர்ஸ்துதி ஸம்பூர்ணம்.
ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து,

---

27. விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம்.

## ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய
## ஸங்கிரஹ ராமாயணம்.
### யுத்தகாண்டம் 13–வது ஸர்க்கம்.

---

(முன் 12-ம் பக்கம் தொடர்ச்சி)

அப்படியே இடியை முகத்தில் கொண்டவைகளும் சூரியனை முகத்தில் கொண்டவைகளுமான பாணங்களால் ராகவன் ராவணனுடைய அஸ்திரங்களை நாசம்செய்தார். சத்ருவான ராவணன் தேவாஸ்திரம், காந்தர்வாஸ்திரம் முதலானவைகளைப்போட, ராகவன் அந்த தேவகாந்தர்வ அஸ்திராதிகளாலேயே அவைகளை நாசம் செய்தார். ராவணன் தன் அஸ்திரவீர்யத்தால் விஷங்களை கக்கும் க்ரூரங்களான ஸர்ப்பங்களை ஸிருஷ்டித்தான். ஸ்ரீ ராமசந்திரன் பாணங்களால் ஸிருஷ்டிக்கப்பட்ட கருடங்களால் அந்த ஸர்ப்பங்களை நாசம்செய்தார். இதராளால் செய்யமுடியாதவைகளை எல்லாம் ராவணன் யுத்தத்தில் செய்துகாட்டினான். ராவணன் எதை எதைச் செய்தானோ, அதை எல்லாம் ராகவன் பதில் செய்து காட்டினார். ராமராவணனுடைய அந்த யுத்தத்திற்கு உபமானம் அந்த ராமராவணனுடைய யுத்தம்தான். ஆகாயத்திற்கு உபமானம் எப்படி ஆகாயம்தானோ, ஸமுத்ரத்துக்கு உபமானம் எப்படி ஸமுத்ரமே தானோ அப்படித்தான் இந்த யுத்தத்திற்கு உபமானம் இந்த யுத்தம்தான். ராவணன் கர்ஜித்துக் கொண்டு அடுத்தடுத்து ராமருடைய ரதத்தையும், ஸாரதியையும், குதிரைகளையும், த்வஜத்தையும் க்ரூரமான பாணங்களால் ப்ரஹாரம் செய்தான். அப்பொழுது பகவான் லோகபயங்கரமான கோபத்தைக் காட்டினார். பூர்ணானந்தரான முகுந்தராகிய ராமசந்திரரிடம் தமோகுணத்தால் உண்டான கோபம் என்பது எப்படி ஏற்படும்? புருவம் நெறிபட்ட நெற்றியாலும், எங்கும் சிவந்திருக்கும் கடைக்கண்ணாலும், பாவகர்ப்பிதமான ப்ரூவிலாஸத்தாலும், ஸ்ரீ ராமர் ஸர்வ பயங்கரமூர்த்தியாய் தோன்றினார். பகவானாகிய ஸ்ரீ ராமசந்திரனின் அந்த வேகத்தைக் கண்டு ராவணன் பயம் வியாபித்தவனாய், தன் ஆபத்தனம்போல்



தனியே வைக்கப்பட்டிருந்த ஓர் சூலாயுதத்தை ராவணன் எடுத்துக்கொண்டான். கொழுந்துவிட்டு எரிவதாயும், ப்ரளயகாலத்திய அக்னியைப்போல் பயங்கரமானதாயும் மணிகள் கட்டப்பட்டதாயுமுள்ள அந்த சூலாயுதத்தை விரைவில் ராவணன் ராமரிடம் ப்ரயோகம்செய்தான். ஸர்வசக்தரான அந்த ராமசந்திரப்ரபு சக்த்யாயுதம் போட்டு அந்த சூலாயுதத்தை நாசம் செய்தார். கடோரமான பாணங்களால் ராவணனுடைய துடைகளையும் மார்பையும் பிளந்தார். அநேக பாணங்களைப் போடும் ராவணனிடம் அநேக பாணங்களை ப்ரயோகம் செய்துகொண்டு மேகம்போல் கம்பீரமாயிருக்கும் குரலுடன் ஸ்ரீ ராகவன் இவ்வாறு பேசினார். "ராவணா! நீ விச்ரவஸ் ரிஷியின் மகன். சூரன். குபேரனுக்கு ஸஹோதரன். உன்னுடைய புஜபலத்தாலேயே எல்லா திக்குகளையும் நீ ஜயித்திருக்கிறாய். நாடகத்தில் வேஷம்போட்டுக் கொள்பவன் கபடமாய் குணங்களை நடித்துக்காட்டுவதுபோல், இந்த குணங்களை எல்லாம் கபடமாகத்தான் நீ நடித்திருக்கிறாய். இயற்கையில் நீ அயோக்யன் என்பது பெண்ணை களவாடியதைக் கொண்டு நிச்சயம் ஏற்படுகிறது. ப்ரம்மஹத்யா, குருத்ரோஹம், தேவர்களை அவமதித்தல் முதலான மகா பாபங்கள், பெண் திருட்டால் உனக்கு புதிதாய் ஏற்படச் செய்திருக்கிறாய். க்ரூரமான அப்பேர்ப்பட்ட உன்னுடைய ஹ்ருதயத்தை, ஸாதுக்களின் தர்ம மார்க்கத்திற்கு தடையாய் இருக்கும் கதவைப்போல் உள்ளதை, இப்போதே பிளக்கிறேன். மகரிஷிகளைக்கொன்று அந்தமாமிஸத்தால் புஷ்டமான உன்னுடைய மாமிஸத்தைக்கொண்டு பருந்துகளுக்கு இப்போது விருந்து அளிக்கிறேன். பார். அந்த ஸீதாதேவியின் பர்த்தாவின் பராக்கிரமத்தை. என்று ராகவன் சொல்லி இடிபோலொத்த பாணங்களால் மலைபோன்ற ராவணனுடைய சரீரத்தைப் பிளந்தார். ராமபாணங்களால் சேதமடைந்த சரீரமுள்ளவனாய், லோகங்களை அழச்செய்பவனான ராவணன் தேகக்கட்டு வலவலத்துப்போய் கண்கள் சுழன்றவனாய் ஓர் முகூர்த்த காலம் மூர்ச்சிதனாய் விழுந்தான். பாதிபாகம் ஸந்தோஷமடையச் செய்யப்பட்ட தேவர்களாகிய கமலங்களுள்ளவரும் பாதி மூடப்பட்ட ராக்ஷஸர்களாகிய ஆமல் புஷ்பங்களுள்ளவரும் பாதி

பாகம் நாசம்செய்யப்பட்ட ராவணனாகிய இருளுள்ளவருமான பாதி உதயமடைந்த ராமனாகிய சூரியன் இவ்வாறு பிரகாசித்தார்.

13வது ஸர்க்கம் முடிந்தது.

---

## 14-வது ஸர்க்கம்.

பலவகை விமானங்களில் ஏறியிருக்கும் தேவர்களாலும் மகரிஷிகளாலும் அழைக்கப்பட்டவராய் மந்த்ர வித்துக்களில் ச்ரேஷ்டராய் உள்ள மகாச்ஞானியான அகஸ்தியர் ஆகாயத்திலிருந்து கீழே இறங்கி ஸ்ரீ ராமரிடம் வந்து வார்த்தையைப் பேசினார். “ஸர்வேச்வரனான ஸ்ரீ ராமசந்திரா! இந்த விளையாட்டுகளை விளையாடுவதெல்லாம் போதும். உலகத்துக்கு முக்ய சத்ருவாகவுள்ள இந்த ராவணனை சீக்கிரம் நாசம் செய்யும். நாங்கள் இன்னார் என்பதை அறியாமல் உலகம் சந்தேகங்கொண்டு பயப்படுகிறது. தம்மிடம் வைத்திருக்கும் மனம் இளகியவர்களின் ஸ்நேகம் கலங்கமற்றதாய் இருக்கிறது. சூரியமண்டலத்தின் நடுவில் இருப்பவரும் நாராயணரும் பக்த பராதீனருமான தம்மை இந்த திவ்யமான ஆதித்யஹ்ருதயமென்னும் ஸ்தோத்திரத்தால் ஆராதித்து இந்த உலகம் எல்லாம் எல்லா புருஷார்த்தங்களையும் அடையட்டும்.” என்றிவ்வாறு அகஸ்தியரால் சொல்லப்பட்ட பகவான் ராமசந்திரன் அப்படியே செய்கிறேன் என்று ஒப்புக்கொண்டு தனுஸ்ஸை இழுத்தார். ப்ரக்ஞையை அடைந்து பயத்தை அடையாமலேயே அந்த ராவணன் ராமசந்திரனை அடைந்தான். ராவணனுடைய பராக்கிரமத்தை அறிந்தும் தன் மரணத்தை சூசிப்பதாயுமுள்ள அபசகுனத்தைப் பார்த்தும் ராவணனுடைய மனம் சிறிதும் சலனமடையவில்லை. ரோஷக்காரர்கள் ஆபத்காலத்திலும் மனம் சஞ்சலமடையமாட்டார்கள். கமலக்கண்ணனான பகவான் ராமசந்திரன் தன் த்வாரபாலகர்களின் ச்ரேஷ்டனாய் சனகாதிகளின் சாபத்தால், சத்ருவான ராக்ஷஸ ஜன்மாவை அடைந்தவனாயுள்ள வைகுண்ட த்வாரபாலகனான ஜயனுடைய பிறப்பான அந்த ராவணனுடன் விசேஷமாய் விளையாடுபவராய் விசித்ரமான யுத்தம் புரிந்தார்.

(தொடரும்)



## அவதூத கீதை.

---

(முன் 20-ம் பக்கம் தொடர்ச்சி)

அதேமாதிரி உடம்பில் ஈ, எறும்பு, மூட்டைப்பூச்சி முதலானவைகள் உட்கார்ந்து ரக்தபானம் செய்து, அதனால் ஹிம்சை ஏற்படும்பக்ஷத்தில், ரக்தபானம் இவைகளுக்கு ஈச்வர கல்பிதமான ஆஹாரம், நாம் இதற்காக இவைகளை நசுக்கிவிடலாகாது என்று ஹிம்சா புத்தியைக் கொள்ளாமல், தேஹாபிமானம்விட்டு, அவைகள் உண்டாக்கிய வேதனைகளையும் பொறுத்துக்கொள்ள வேண்டும். இந்தபடிப்பினையை பூமியிலிருந்து நாம் தெரிந்துகொள்ளவேண்டியதாகும் “பூதை ராக்ரம்யமாணோபி தீரோ தெய்வ வசானுகை:| தத்விதாம் ந சலேன் மார்க்காத் அனுசிக்ஷன் க்ஷிதேர்வ்ரதம்” எனப்பட்டது.

மற்றொரு புத்தியையும் பூமியிலிருந்து அடையலாம். பூமி தன்னிடம் ஸமர்ப்பித்த ஓர் விதைக்கு பன்மடங்கான தானியாதிகளை தன்னிடமிருந்து உண்டாக்கிக் கொடுக்கிறது. அப்படியே ஒரு சிறு விதையினின்றும் பெருத்த மரத்தையும் அதில் ஏராளமான பல புஷ்பாதிகளையும் உண்டாக்கித்தருகிறது. இவ்வளவு விருத்தியும் தனக்காக அல்ல. எல்லாம் இதரருக்காக பரோபகாரார்த்தமாய் தன்னிடம் கொடுத்ததை விருத்தியாக்கித் தருகிறது. அம்மாதிரியே விவேகியான புருஷன் தன்னிடமிருக்கும் சொத்தை விருத்தியாக்குவது இதரருக்காக என்று பாவனைகொண்டு ஸாது ஜனங்களின் கைங்கரியத்திலேயும் பரோபகாரத்திலேயும் தன் திரவியங்களின் விருத்தியம்சத்தை செலவிட வேண்டும். இதுவும் பூமியால் நாம் அறிந்துகொள்ளவேண்டியதே ஆகும். “சச்வத் பரார்த்த ஸர்வேஹாம் பரார்த்தைகாந்த ஸம்பவம்| ஸாது சிக்ஷேத பூமேஸ்ச அனுசிக்ஷன் வ்ரதாந்தரம்” எனப்பட்டது.

2. காற்று ஓர் குரு. ஒருவன் பாடினால் காற்று அதை வெளியே கொண்டுபோய்விடுகிறது. அதனால் காற்றுக்கு கான சம்பந்தம் உண்டா! பிறகு காற்றில் கானசம்பந்தத்தை நாம்

உணருகிறோமா? அதுபோல் மனோயோகமுள்ளவன் உலகில் தன் ஜீவனத்திற்காக விருத்தியை நடத்தும்பொழுது, எவ்வளவோ இந்திரிய வ்யாபாரங்கள் இந்திரிய விஷயங்கள் இவைகளில் கலக்கவேண்டிவரும். அதனால் இவன் மனம் சலனமடைந்து அவைகளில் ஈடுபடலாகாது. அவைகள் தனக்கு ஹிதமானவைகள் என்னும் புத்தியைக் கொள்ளலாகாது. அவைகளில் இவனுடைய மனம் ஈடுபடாமற்போனால் அவைகளின் பாபசம்பந்தமும் இல்லாமற்போகும். இந்த படிப்பினையை காற்று அறிவிக்கிறது. "விஷயேஷ்வாவிசன்யோகி நாநாதர்மேஷு ஸர்வத:। குணதோஷான்வயே நாத்மா நவிஷஜ்ஜேதவாயுவத்" எனப்படுகிறது.

மற்றொரு படிப்பினை. வாயு ப்ருதிவீசபந்தமான வஸ்துக்களில் பிரவேசம் செய்தபோதிலும் ப்ருதிவியின் சம்பந்தங்கொண்ட கந்தத்தின் ஸம்பந்தத்தை சுயம் அடையாமல் அதை விட்டுவிடுகிறது. அதைப்போலத்தான் மனுஷ்ய தேகம் கொண்டிருப்பினும் ஜீவேசுவர க்ஞானம் பெற்றவன், சரீரதர்மமான ஜனனமரண சம்பந்தமாயுள்ள சுகதுக்காதிகளையும், துக்காதிகள் ஏற்படும்போது மனச்சங்கடத்தையும், தன் சாஸ்திரக்ஞானத்தை உபயோகப்படுத்தி அடையலாகாது. ஜீவன் நித்யன் ஆனால் பரதந்திரன், ஈசுவரன்தான் ஸ்வதந்திரன், அவனுடைய சங்கற்பத்தால்தான் யாதும் ஏற்படுகிறது, என்று விவேகபுத்திகொண்டு சரீரதர்மங்களின் ஸம்பந்தம் பெறாமல் இருக்கவேண்டும். இதும் காற்று போதிக்கிறது. "பார்த்திவேஷ்வேவ தேஹேஷு ப்ரவிஷ்ட: தத்குணாச்ரய:। குணைர் நயுஜ்யதே யோகி கந்தைர் வாயுரிவாத்மத்ருக்" எனப்படுகிறது.

3. ஆகாயம் ஓர் குரு. ஆகாயம் உலகிலுள்ள எல்லா ஸ்தாவர பதார்த்தங்களிலேயும் ஜங்கம பதார்த்தங்களிலேயும் வியாபித்து இருக்கிறது. ஆகாயம் வியாபிக்காத இடமே இல்லை. ஆயினும் ஆகாயம் எதிலும் சம்பந்தம் பெறாமல் தனியாகவே இருந்துவருவதுதான் ஆச்சரியப்படத்தக்கது. அம்மாதிரியே பகவான் எல்லா சராசர ப்ரபஞ்சங்களிலேயும் வெளியிலும் உட்புறத்திலும் வியாபித்திருக்கிறார், (தொடரும்)



# மாத்வமித்திரன் ஜூபிலி.

(முன் 16-ம் பக்கம் தொடர்ச்சி)

அவரே யாரிடம் ப்ரஸன்னராய் தன் பக்தரென ஸ்வீகரிப்பாரோ அவருக்குமட்டில் தரிசனத்தை அளிப்பவரோ, யார் அநிருத்த ப்ரத்யும்ன ஸங்கர்ஷணாதி ரூபங்களை அங்காங்கிகளாய் ஸ்வீகரித்து வாயுபகவான் மூலமாய் எல்லா சேதனர்களுக்கு சேஷ்டாதிகளை நடத்துகிறவரோ அப்பேர்ப்பட்ட அநந்த கல்யாணகுண பூர்ணராய் தோஷரஹிதராய் ஸ்ரீ பூதுர்க்கா ஸமேதராய் ஆயிரம்பணா முடிகளுடன் கூடிய ஆதிசேஷனின் போகபர்யங்கத்தில் சயனித்திருக்கும் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியாகிய ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹர் எப்போதும் எமக்கு துணைபுரிவாராக.

அவருடைய ஸங்கல்பத்தால் ஸ்ரீ வாயுபகவானின் மூன்றாவது அவதாரமாகிய ஸ்ரீ மத்வாசாரியார் அவருடைய ஸர்வோத்தமத்வத்தை நிரூபிக்கும் பலவகையான நூல்களை இயற்ற, எல்லா தேவர்களுக்கும் ஸத்குருவாயும் தலைவராயும் இருக்கும் வாயுபகவான் செய்யும் காரியங்களுக்கு ஸகாயம் செய்துவரும் இயல்புகொண்ட தேவர்களும், அவரைப்போல் அவனியில் ஸன்யாஸிகளாய் பிறந்து, அவர் இயற்றிய நூல்களின் தாத்பரியங்களை எண்ணிறைந்த டீகாடிப்பணி நூல்களால் விளக்கி, ஸ்ரீ மத்வாசாரியாரின் மதத்திற்கு விரோதமான மதங்களை பலவகையாய் கண்டன நூல்களால் தூஷித்து, இப் பாரதபூமியில் ஸ்ரீ மத்வமதத்தை வேரூன்றச் செய்தனர். கல்வி படைத்தவர்கள் ஸ்ரீ மத்வமதத்தின் ஸர்வோத்தமத்வத்தை அசைக்கமுடியாமற்போய்விட்டது. எப்பாடுபட்டும் இதுவரையில் யாரும் க்ஞான உலகில் ஸ்ரீ மத்வமதத்திலுள்ள இதரமதத்தின்பேரில் கிளப்பப்பட்ட தூஷணைகளுக்கு பதில் சொல்லமுடியவில்லை. அத்வைதம், விசிஷ்டாத்வைதம், நியாயவைசேஷிகாதி மதத்தினர்கள் வேதாந்தம் என்று பரப்பும் ப்ரமேயங்களின் மீது, பலவகையான தூஷணைகளை ஸ்ரீ வியாஸராஜர் சந்திரிகா, நியாயம்ருதம் முதலான நூல்களில் எடுத்

துச்சொல்லவும், அவைகளைக்கண்டு ஸகியாத ஸ்ரீ மதுஸூதன ஸரஸ்வதி என்ற மகாபண்டிதர் அத்வைதஸித்தி என்ற நூலை இயற்றி அந்த தூஷணைகளுக்கு பதில் சொன்னதாய் பரைசாற்றினார். அந்த நூலின்மீது தரங்கிணி என்று ஸ்ரீ ராமாசாரியார் ஓர் கண்டன நூலை இயற்றி அத்வைதஸித்தியின் யுக்திகள் ஓங்காமல் செய்தார். இந்த நூலின் மீதும் பிரம்மாநந்த கௌடர் என்னும் ஓர் அத்வைதி லகுசந்திரிகை என்று கண்டன நூலை இயற்றி பிரசித்தம் செய்ய, வனமாலாமிச்ரர் என்ற ஓர் வடதேசத்திய மாத்வர் ஸௌரபம் என்னும் கிரந்தத்தில் அந்த அத்வைதியின் எல்லா வாதங்களையும் வெகுவாய் கண்டித்துவிட்டார். இவ்வாறு இதர மதத்தினர்கள் அரும்பாடு பட்டும ஸ்ரீ மத்வாசாரியார் அறிவித்திருக்கும் மதத்தின் மகா மேன்மையை அசைக்கமுடியாமற் போய்விட்டதற்கு பஞ்சக்ரந்தி என்னும் இந்த நூல்களின் தொடர்ச்சி முக்ய அத்தாக்ஷி ஆகும். தற்போதும் கூட எல்லா சபைகளிலும் மாத்வபண்டிதர்கள் கிளப்பும் தூஷணைகளுக்கு அத்வைதிகள் முதலான இதர மதத்தினர் பதில் சொல்லமுடியாமல் லௌகிகமாய் நடந்து தம் தோல்வியை மூடப்பார்ப்பது கண்கூடாக இருக்கிறது.

ஸ்ரீ மத்வமதத்திற்கு இவ்வளவு ஸ்பஷ்டமாய் மேன்மை இருந்தும் ஸாமானியர்களில் இது பிரசித்தம் அடைந்திருக்கவில்லை. மகங்களில் வெகு பல்பஜமான அத்வைத மதத்திற்கே மஹத் கீர்த்தி ஏற்பட்டது. வேதாந்தம் என்றால் அத்வைதமதம்தான் என்று ஸாமானியர்கள் கருதிவிட்டனர். அத்வைத மதாசாரியாருக்குத்தான் பரம முக்யத்வம் ஏற்பட்டுவிட்டது. உலகில் இதர கல்வித்துறையில் பிரசித்தமானவர்கள், மதாசாரியார்கள் என்றால் சங்கரரும் ராமானுஜரும்தான் என்று சொல்லத்தொடங்கிவிட்டனர். எல்லா மதங்களையும் வேறுடன் அறுத்தெறியும் கல்வித் திறம்கொண்ட ஸ்ரீ பூர்ணப்ரக்ஞர் என்ற க்ஞானவான்களின் உலகில் பிரசித்தரான ஸ்ரீ மத்வாசாரியாரின் பெயரை பிரஸ்தாபிப்பதையே விட்டுவிட்டனர். (தொடரும்)



# ச்ராத்தபோதினி.

(முன் 22-வது வாலியம் 209-வது பக்கம் தொடர்ச்சி)

தேவர்களின் பிரார்த்தனையின்பேரில் சதுர்முகன் அவர்களை சமாதானம் செய்ய கச்யப மகாமுனிவரை அனுப்பினார். அவர் என்ன சமாதானம் செய்தாலும் பித்ருக்கள் தங்களுக்கு அன்னமில்லாமல் போயிற்றே என்று அவர்களின் கோபம் தணியாமற்போக, கசியபர் அந்த சந்தர்ப்பத்தில் பித்ருக்களுக்காக வென்றுதான் தேகத்திலுள்ள ஒவ்வொரு மயிற்கண்ணிலிருந்தும் ராசி ராசியாய் எள்ளை சிருஷ்டி செய்து குவித்து உங்களுக்கு இந்த அன்னத்தை ஏற்படுத்தி இருக்கிறேன். கல்பகோடிகாலம் இந்த அன்னமே பித்ருக்களான உங்களுக்கு அலாதியானதாய் இருக்கட்டும் என்றார். எள்ளைக்கண்டமாத்திரத்தில் பித்ருக்கள் மகத்தான திருப்தி அடைந்தனர். மிகுந்த சந்தோஷத்துடன் "எங்களுக்கு யக்ஞத்தில் பாகம் ஏன்? அமிர்தம் தந்தாலும் எங்களுக்கு திருப்தி இல்லை. இந்த எள்ளுதான் எங்களுக்கு எப்போதும் இருக்கட்டும்" என்றனர். சிராத்தத்தையும் தர்ப்பணத்தையும் எள்ளுடன் சேர்த்து செய்தால் அவ்வாறு செய்பவருக்கு ப்ரஜா, தனம் ஸ்வர்க்கம் முதலானவைகளை ப்ரீதர்களாய் நாங்கள் கொடுப்போம்" என்று சொல்லி அவர்கள் அந்தர்தானமடைந்தனர். பிரம்மாதி தேவர்களும் சந்தோஷமாய் யாகத்தை முடித்துப்போயினர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இதிஹாஸத்தைத்தான் சிராத்தத்தில் "திலோஸி ஸோமதெய்வத்ய: கோஸவே தேவநிர்மித:" என்ற வாக்யத்தால் ஞாபகப்படுத்திக்கொள்ளப்படுகிறது. விஷ்ணுவின் சரீரத்திலிருந்து தர்ப்பைகளும் கருப்பு எள்ளும், தர்மஸம்ரக்ஷணார்த்தம் பிறந்தவைகள் என்று மத்ஸ்ய புராணமும், ப்ரம்மவைவர்த்த புராணமும், அறிவிக்கின்றன. அநாவிருஷ்டி வந்த சமயம் தங்களுக்கு ஆகாரமான எள்ளு கிடைக்காமல் போனதன் நிமித்தம் பித்ருக்கள் கடுந்தவம் புரிந்ததாய் ஆதித்யபுராணம் அறிவிக்கிறது. எள்ளு கலந்த ஜலம் பித்ருக்களுக்கு திலாமிருதமாகும். திலம் கலந்த அன்னாதிகளை பித்ருக்களின் உத்தேசமாய் கொடுத்தால் ஆயிரம் அக்னிஷ்டோமம் செய்த பலன். திலதானம் ஸமஸ்த பாபங்களையும் போக்கக்கூடியது. எல்லா அரிஷ்டங்களும் விலகும். அக்ஷயத்ருதியாவில் திலபாத்ரம் கொடுத்தால் அதனால் ஏற்படும் புண்யத்திற்கு அந்தமே இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

(தொடரும்)

# அதிரிக்த ஏகாதசி உபவாசம்.

உத்தராதிமடத்து பஞ்சாங்கத்தில் அதிக ஆஷாடமாஸம் கிருஷ்ணபக்ஷத்தில் ஏகாதசி த்வாதசி (1950ஞு ஜூலை 10உ 11உ) ஸோமவாரம், மங்களவாரம் இரண்டு நாட்களும் நம்மவர்களால் உபவாஸம் செய்யப்படவேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. எமது மாத்வமித்திரன் காலண்டரிலும், பாண்டுசங்கி, வரகேடி, ஸம்பிரதாயத்தார்களுக்கும், வியாஸராஜ மடத்தார்களுக்குமட்டில், இரண்டு உபவாஸங்கள் என்று, இவர்களின் கொள்கைகளை அறிந்ததின் நிமித்தம், அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு இவர்கள் இரண்டு உபவாஸங்களை செய்வது பிராமாணிகமா என்பது தற்போது விமரிசிக்கப்படுகிறது.

அதிரிக்த த்வாதசி என்பது உபவாஸம் செய்யப்படவேண்டியதுதான். அதற்கு முந்தியநாள் ஏகாதசியும் உபவாஸம் செய்யப்படவேண்டியதுதான். இதை நாம் விவாதிப்பதில்லை. இவ்வருஷம் ஏற்பட்டிருப்பது அதிரிக்த த்வாதசிதானா? அதற்கு முந்திய நாளான ஏகாதசி, உபவாஸம் செய்யப்பட அருகமானதா? என்ற இரண்டு அம்சங்களையும் சோதிப்போம். அதிரிக்த த்வாதசிக்கு லக்ஷணம் "தசமீ வேதரஹிதா பரதோ த்வாதசீயதி। அதிரிக்தாது ஸாக்ஞேயா ஸர்வபாப ப்ரணாசினீ" என்று ஸ்காந்த புராணம் அறிவிக்கிறது. இதனால் அதிரிக்த த்வாதசிக்கு என்றால், இரண்டு உபவாஸங்களைச் செய்வதற்கு, (1) தசமி வேதம் இல்லாமல் இருக்கவேண்டும் (2) த்வாதசி பிந்திய நாளும் சொச்சம் இருக்கவேண்டும். இவ்விரண்டும் இருந்தால்தான் இரண்டு உபவாஸங்களைச் செய்யவேண்டுமே அல்லாது ஒரு ஐட்டம் இல்லாதிருந்தாலும் இரண்டு உபவாஸங்களைச் செய்யலாகாது என்பது தெளிவு. (1) தசமி வேதம் ஏற்பட்டிருக்கிறதா இல்லையா என்பதை பஞ்சாங்கத்தின் நாழிகையைக்கொண்டு நாம் நிச்சயிப்பதில்லை. பஞ்சாங்கத்திலுள்ள தசமி நாழிகையுடன் ஆர்யமான சித்தாந்தத்தின்படிக்குள்ள நாழிகையைச் சேர்த்து, தசமி நாழிகையை ஆர்யசித்தாந்தத்திற்கு கொணர்ந்து,



வேதம் வந்தால், அதன்படி மறுநாள் உபவாஸத்தைச் செய்யாமல், அதற்கு மறுநாள்தான உபவாஸம்செய்கிறோம். இதனால் தசமீவேதம் ஆர்யமானத்தால் நிச்சயிக்கிறோம் என்பது நிர்விவாதமானது. அதிரிக்த உபவாஸத்திற்கு இரண்டு அம்சங்களான ஓர் அம்சத்தை ஆர்யமானத்தால் நிச்சயிக்கும்பொழுது, மற்றொரு அம்சத்தை ஆர்யமானத்தால்தான் நிச்சயிக்கவேண்டுமென்பது புலப்படுகிறதில்லையா? ஒருவருக்கு ஏதோ ஆக்ரஹத்தால் புலப்படுகிறதில்லை என்றால், அவ்வாறு செய்யவேண்டுமென்று எண்ணிறைந்த பிராமணங்கள் இருப்பதை அவரால் மறைக்கமுடியாது. தசமீ, ஏகாதசீ, த்வாதசீ ஆகிய இந்த மூன்று நாட்களைக் கொண்ட த்ரிதின வ்ரதம், ஆர்யமானத்தால்தான் நிர்ணயிக்கவேண்டியதாகும். தசமி வேதம்மட்டில்தான் ஆர்யமானத்தால் பார்க்கவேண்டும் என்று சொல்வது பிரமாண விருத்தமான யுக்திவாதமே. "க்ஞாத்வா விப்ர ஸ்திதிம் ஸம்யக் தைவக்ஞை: ஸமுதீரிதாம்। கர்த்தவ்ய: உபவாஸஸ்து அன்யதா நரகம் வ்ரஜேத்" என்னும் பிரமாணத்திற்கு விளக்கமாய் "வ்ருத்தௌ ப்ரவ்ருத்த ஸித்தாந்த பதிகம்ய முனீச்வரா:। தைவக்ஞை: நிர்ணய: கார்ய: தசம்யாதி தினத்ரயே" என்றும், "ஸர்வேஷாம் உபவாஸானாம் நிர்ணயஸ்ச கதோ பவேத்। தசம்யாதித்ரயாணாம் து ஸ்தம்பேனைவது காரயேத்" என்றும் "வ்ருத்தௌ ஆரபடோக்தாஹ்ய:" என்றும் "ஸர்வகர்மஸு க: ச்ரேயான் விஷ்ணு தர்மேஷு யோதிக:" என்றும் "விஷ்ணு தர்மேஷு தசம்யாதித்ரய விஷ்ணுபஞ்சக ஜன்மாஷ்டம்யாதிஷு, யோதிக: பக்ஷ:, ஆர்யபட்ட ஸித்தாந்தச்ரேயான், இத்யர்த்த:" என்றும் "த்வாதச்யாதி வ்ரதாதீனி ஹ்யபார்யேண வேதி நிஸ்சய:" என்றும் பிரமாணங்கள் தசமி, ஏகாதசி, த்வாதசி, உபவாஸங்கள் செய்யப்பட, இம்மூன்றும் ஆர்யபடீத்யாதான் கணக்கிடப்படவேண்டுமென்று ஸ்பஷ்டமாய் அறிவிக்கின்றன. இந்த வருஷத்தில் அதிக ஆஷாட மாஸம் கிருஷ்ணபக்ஷத்தில் (12—7—1950) புதவாரத்தன்று த்வாதசி உபரி 20 விநாடி இருக்கிறதென்ற காரணத்தால் மட்டில் 10உ. சோமவாரமும் 11உ மங்களவாரமும் ஏகாதசி உபவாஸம் என்று உத்திராதிமடத்து பஞ்சாங்கத்தில நிர்ணயிக்கப்பட்டிருப்பதாய்

நினைக்கவேண்டியிருக்கிறது. ஸித்தாந்த பஞ்சாங்கத்திலுள்ள 20 விநாடி, இவர்களை 11ல் இரண்டாவது உபவாஸம் செய்ய அருகமானதாய் செய்யாது. ஆர்யமானத்தின்படி அன்று த்வாதசி இருந்தால்தான் இவர்களை அன்று 2வது உபவாஸம் செய்ய அனுமதி அளிக்கும்: ஏகாதசி திதி அதிக நாழிகை இருந்து, ஆர்யமானத்தால் உபரி த்வாதசி, கணக்கில் வந்து, அச்சமயம் தசமி வேதமும் இல்லாமலிருந்தால் தான், ஏகாதசியன்றும் த்வாதசியன்றும் இரண்டு உபவாஸங்களைச் செய்யலாம். ஆர்யமானத்தால் உபரித்வாதசியின் நிர்ணயம் ஏற்படாமல், ஸித்தாந்தத்தின்படி பஞ்சாங்கத்தில் உபரி த்வாதசி காணப்பட்டுவிட்டாலோ, மேலே சொன்ன எல்லா நிர்ணயமும் மாறிவிடும். உபரித்வாதசிகண்ட நாளுக்கு முக்கி ஸம்பூர்ணத்வாதசி இருந்தநாள்மட்டில், ஒரே உபவாஸத்திற்கு அருகமானதாய் ஆகும். அந்த ஏகாதசி, வித்த ஏகாதசியாகி விட்டு, போஜனம், வைச்வதேவம், சிராத்தம் சமக்கிரியை முதலானவைகளைச் செய்ப அருகமானதாய்விடும். அவ்வாறு அந்த ஏகாதசி வித்தமாய் போக, பஞ்சாங்கத்தில் தசமி நாழிகை இல்லாமற்போய்விட்டதே என்றால், இந்தமாதிரி சந்தர்ப்பத்தில் அந்த தசமி நாழிகையை, ஆர்யமான கணக்கில் கொண்டுவர, அதிகமான இன்ன நாழிகையைச் சேர்க்கவேண்டும் என்று பிரமாணங்கள் இருக்கின்றன. உபரித்வாதசி பஞ்சாங்கத்தில் காணப்பட்டால் அது வஞ்ஜுளா த்வாதசி என்றுபெயர். த்வாதசியன்று மட்டில் உபவாஸம் செய்து உபரி த்வாதசியன்று பாரணம் செய்வது மகா பலனை அளிக்கும். எமது இந்த அபிப்பிராயத்தை அறிவிக்கும் பிரமாணங்களாவன:—

(1) ஸ்ரீ பகவத் பாதானுஜ விஷ்ணு தீர்த்த விரசிதே லாதவ்ய வாதிராஜ முனி சேகர ஸம்மானிதே நிர்ணயாம்ருதே வசனம்:—"பரேத்யுஸ் சாங்த்ரமானேன யதாஸ்யாத் த்வாதசீதிதி:| ஆர்யேண ஏகாதசி வித்தா தசமேத்யாஹ கௌதம:" இதி.

(2) "அபிசேத் த்வாதசீ ஸ்வல்பா ஸித்தாங்தே பரதோயதி| நோபவாஸத்வயம் கார்யம் தசமீ வேத நிர்ணயாத்" இதி பண்டிதாசார்ய வசனம்.



(3) பாவபோதாசார்யக்ருத திதிநிர்ணயே "தசமீ வேதஹீனு சேத் விருத்தி ஏகாதசீ" த்யாதி பூர்வோதா ஹ்ருத வசனம் ஸமானார்த்தகம் மானம்.

(4) "அதிவ்ருத்தௌது ஸித்தாங்தே ப்ரதோத்வாதசீயதி| த்வித்ரேககடிகா ஊஹ்யா தசமீ வேதஹீனயா" இதிஸ்மிருதி சந்திரிகாயாம்.

(5) "அதிவ்ருத்தௌது ஸித்தாங்தே பரதோத்வாதசீஸ்திதா| வேதா பாவே தசம்யாஸ்து த்விபஞ்சாசத்கடீம்வினு| வேதாக்னி நேத்ர ஸங்க்யாபி: ஹீனுசேத் ஆர்யத ஸ்ததா| ரித்வத்ரி வஸுபரத்ஞனும் ஸங்க்யாபி: வ்ருத்திரிஷ்யதே" இதிஸ்மிருதிரத்னே|

(6) அதிரிக்தோபவாஸஸ்ய வேதராஹித்யம் ஆதிமம்| ஸித்தாங்தே பரதோத்வாதச்யபாவ: அன்யச்ச காரணம் "இதிவிஷ்ணு தீர்த்தீய நிர்ணயாம்ருதவசனம்.

(7) "தசமீ வேதஹீனுசேத் வ்ருத்தாச ஏகாதசீயதி| த்யயோர் தச்யாம் கியன்மாத்ரம் ஸித்தாங்தே த்வாதசீயதி| த்யக்த்வா ஏகாதசீம் தத்ர த்வாதச்யாம் உபோஷயேத்| த்வாதச்யாம் பாரணம் குர்யாத் வைஷ்ணவைரிதி நிர்ணய:|"

(8) "த்வாதசீ சாங்த்ரமானேன பரேத்யு: ஸ்வல்பகாயதி சாங்த்ரமானேன தசமீ பஞ்சாசத் கடிகாயதி| நோபவாஸத்வயம் கார்யம் இத்யாஹ பகவான்மனு:"

(9) "த்வாதச்யாம் உபவாஸன் து த்வாதச்யாமேவபாரணம், வஞ்ஜுளா ஸாதிதி: ப்ரோக்தா ஹத்யாயுத விநாசினீ" இதிஸ்மிருதிமாலா.

(10) "யேன மானேன தசமீ வேதோ நிர்ணியதே புதை: த்வாதச்யா: அதிரிக்தாயா: தேனைவேத்யா ஹகௌதம:" என்று ராமசந்த்ரதீர்த்தீயே.

(11) "த்வாதசீ சாங்த்ரமானேன பரதோத்வாதசி ஹியதா பவேத்| ஏகாதசீ த்வவித்தாபிநோபோஷ்யா விஷ்ணுதத்பரை:" இதி ஸுதீந்த்ர தீர்த்தீயே.

(12) "தசமீவேத ரஹிதாபரதோ த்வாவசீயதி| அதிரிக்தாது ஸாக்ஞேயா ஸர்வபாப ப்ரணாசினீ" ஏதத் அபி அதிக சித்தாந்தா

னுஸாரேண கார்யம் "தசம்யாதி தினத்ரயம்" இத்யுக்தே:" இதி கிருஷ்ணாசார்ய க்ருத ஸ்மிருதி முக்தாவல்யாம்.

இத்யாதி பிரமாணங்களால் [illegible] உபரித்வாதசி காணப்படும் பக்ஷத்தில், அந்த ஏகாதசி விக்தமாகிவிடுகிறதென்று ஸ்பஷ்டமாய் அறிவிக்கும்பொழுது, அன்று உபவாஸத்தால் ஹோமம் வைச்வதேவம் சிராத்தம் முதலானவைகளைவிட்ட பாபம் சம்பவிப்பதாய் ஏற்படுவதால், கேவலம் யுக்தியைக்கொண்டு இரண்டுஉபவாஸங்களை செய்வதால் காயக்லேசம் ஏற்படுவதுடன், பிரமாணவாக்யங்களால் தர்மவிரோதமும் சம்பவிப்பதாய் தெரியவருவதன நிமித்தம், இரண்டு உபாவஸங்களைச் செய்பவர்கள் தம் நிர்ணயத்தை மாற்றி மற்றவர்களைப்போலவே 11—7—50 மங்களவாரத்தன்று மட்டில் ஒரே உபவாஸம் செய்வார்களாக

## செய்திகள்.

வில்லிவாக்கம் மாத்வசங்கத்தின் ஆதரவில் பத்மவிலாஸத்தில் யுகாதி பண்டிகையன்று பஞ்சாங்க சிரவணமும் இச்சங்கத்தின் காரிய நிர்வாஹகர்களின் நியமனமும் நடந்ததாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## விளம்பரம்.

210423

ஸ்ரீ ராகவேந்திரரின் அதி அற்புத ஜீவியசரித்திரம் ஸ்ரீ ராகவேந்திர ஸ்தோத்திரம் மூலம் அர்த்தம் உள்பட ரூ. 1—0—0 தபால்கூலி 0—1—0.

## விசேஷ தினங்கள்.

| | | |
|---|---|---|
| 9—5—50 | மங்களவாரம் | சிரவணம் உப. இல்லை விஷ்ணுப. உப. இல்லை. |
| 12—5—50 | சுக்கிரவாரம் | ஏகாதசி உப. |
| 16—5—50 | மங்களவாரம் | தர்சம் திலதர்ப்பணம் விஷ்ணுப. உப. |
| 28—5—50 | பானுவாரம் | ஏகாதசி உப. |
| 31—5—50 | புதவாரம் | பௌர்ணமி வடஸாவித்ரிபூஜை விஷ்ணுப உப. |

Printed by N Subramania Iyer at Sri Venkateswar Power Printing Works
Edited & Published by Bhagavatha Ranganathachariar Kumbakonam.

சென்னை 600 008